Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஹ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - கூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி ஹு சித்திரை மீ உஉ உ வெள்ளிக்கிழமை (4 MAY 1956) [இல - ச]

# பெருவாழ்வு தரும் திருநீறு

## வினைபோக்கி மெய்யறிவு கொடுக்கும் சிவசின்னம்

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்காவினை சூளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே"

—திருமூலர் திருமந்திரம்

விபூதி திருநீறு என்பன ஒருபொருட் சொற்கள். விபூதி உருத்திராட்சமாகிய மூன்றும் சைவர்களாகிய எல்லோருக்கும் வேண்டற்பாலதான சாதனங்கள். இவற்றுள் விபூதி சிறந்த சாதனமாகும். சைவர்களாகிய எவரும் விபூதியைத் தவறாமல் அணிய வேண்டும். விபூதி அணியாதவனைச் சைவனென்று அழைக்கமுடியாது. ஒவ்வொரு சைவனும் விபூதியைப் பேணி அணிய வேண்டும். "நீறில்லா நெற்றிபாழ்" என்றார் ஔவைப் பிராட்டியார். விபூதி என்பதன் பொருள் மேலான செல்வம். விபூதியைவிட வேறு செல்வமில்லை என்பது பொருள். விபூதியின் உண்மைப் பொருளை நன்கு விளங்கி அதன்படி அநுட்டித்தால் நாம் சிவானுபூதிச் செல்வர்களாய் விளங்குவோம். எல்லா மிருகங்களினும் மேலானது பசு. சிவபிரானின் அபிடேகத்திற்குரிய பஞ்சகவ்வியத்தைக் கொடுப்பது பசு. பசுவின் சாணியை அக்கினியில் இட்டால் அது நீறாகும். பசு என்பதன் இன்னொரு பொருள் ஆன்மா. ஆன்மாவின் மும்மலங்கள் ஆணவம், கன்மம், மாயை இம் மூன்று மலங்களையும் எரித்தால் நீறாகும். மும்மலங்களை எரிப்பதாலேதான் மெய்யறிவுண்டாகும். அப்போது தான் உண்மை ஞானத்தால் வீட்டின்பம் கிட்டும். ஆணவமல சம்பந்தத்தினால் ஆன்மா மெய்யறிவு கைவரப்பெறாமல் ஆன்மபோதம் விடுபடாமல் மேலும் மேலும் இக்சைகளைப் பெருக்கி அதனால் இன்ப துன்பங்களை அடைந்து மீண்டும் மீண்டும் பிறவியாகிய படுகுழியில் வீழ்ந்து அனேக பிறவிகள் எடுத்து உழலும். இத்தகைய தளைகளில் அகப்படுவதனால் நிலையான இன்பமும் உண்மையான விடுதலையும் அடைய முடியாததன்மையதாய் ஆன்மா இருக்கின்றது. இறவாத இன்பம் ஒன்றிருக்கிறது என்றும் உண்மைச் சுதந்திர விடுதலையுமொன்று உண்டு என்றும் விபூதி எமக்கு ஞாபகப்படுத்துகின்றது. விபூதியை அணியும் போதும் காணும்போதும் அதைப்பற்றி நினைவிற் கொண்டுவரும்போதெல்லாம் அதன் உண்மைப் பொருளைச் சிந்திக்கவேண்டும்.

உலகத்திலே தோன்றிய யாவும் அழியும். சர்வ சங்

—ஆசிரியர், திரு. செ. சின்னத்துரை B. A. அவர்கள்

கார காலத்தில் பரமேசுவரனைத் தவிர வேறொன்றும் இருக்காது. பஞ்ச பூதங்களும் ஆன்மா, சந்திரன் சூரியன் யாவும் இறைவனுள் ஒடுங்கும். இந்த உயர்ந்த சைவசித்தாந்த உண்மையையே திருநீறு குறிக்கின்றது உலகமும் அதன் கண் தோன்றிய பொருட்களும் நிலையில்லாதன என்றும் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாகியிருக்கும் இறைவன் ஒருவனே நிலையான பொருள் என்றும் விபூதி தெளிவாக விளக்குகின்றது. ஆகையால் ஆன்மாக்களாகிய நாம் நிலையற்ற பொருளைத் தேடுவதும் அதுதான் வாழ்வு என்று கருதுவதும் அறிவீனமென்றும் நிலையுள்ள இன்பத்தைத் தரவல்ல இறைவனைப் பற்றுதலே இவ்வுலக வாழ்க்கையின் நோக்கம் என்பதையும் விபூதி எடுத்துக் காட்டுகிறது.

திருநீறு வெண்ணிறமுடையது. வெண்ணிற விபூதியே சிறந்ததும் உத்தமமானதும். வெண்ணிற விபூதி பரிசுத்தத்தைக் காட்டுகிறது. தூய்மையைக் குறிக்கின்றது. விபூதி அணிவதால் எம்முடைய மனமும் தூய்மையுடைய வேண்டுமென்று நாம் நினைக்கவேண்டும். விபூதியைப் போல எம்முடைய மனமும் வெள்ளையாக வரவேண்டும் என்பதே விபூதி அணிவதன் நோக்கம். பெரிய புராணத்தில் திருக்கூட்டச் சிறப்பிற் சிவனடியார்களைப்பற்றிக் கூறுமிடத்து

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

அரசியல் அலை

# சாத்திரப்படிக்குச் சனநாயகம்!

## இரைமிகுந்து ஏப்பம் இட முடியாது தயங்கும் ம. ஐ. மு.!!

சீதனம் பேசினது சிறந்த வைரக் கற்கள் பல பதிக்கப் பெற்ற விலைமதிக்கப்பெறுத காதோலை. மணம் முடிந்த பின்பு மாப்பிள்ளை மனையாள் காதிற் கண்டது போலி வைரப் பொய் வேலைத் தோடு இந்த நிலையில் நிற்கின்றார் திருவாளர் வாக்காளர்!

அரிசி ஆறு அணு; சீனி கொள்விலைப்படி, போக்குவரத்துப் பயணக்கூலி மக்கள் பொருள் நிலைக்குத் தக்கபடி. ஐந்து சதத்திற் கடிதம் என்று இவை போன்ற பலவற்றை வாக்காளர்களின் செவிஅடைக்கத் திரும்பவும் திரும்பவும் கூறிச் செல்வாக்குப்பெற்ற ஐக்கிய முன்னணிக் கட்சியார் இப்பொழுது ஆந்தை போல விழிக்கிறார்கள் திருவாளர் வாக்காளரும் திகைத்துப்போய் நிற்கின்றார்.

பொதுத் தேர்தலில் வெற்றி மிதமிஞ்சிப் போய் ம. ஐ. முன்னணியார் இரை மீட்கத் தெரியாது ஏப்பம் இடமுடியாது தத்தளிக்கின்றார்கள். பொதுசனம் கண்டுபிடித்து விட்டது அரசாங்கத்தின் பலவீனத்தை என்று திரு பண்டாரநாயகவின் நெஞ்சு படபட என்று இடிக்கின்றது. அவர்தான் என்ன செய்வார்?

முன்னணியில் ஐக்கியப் பட்ட முத்தண்ணக்கள் பல

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# ஏரிக் கரையினிலே!

மணங்கமழ் மாலைநேரம். மாலைக்கதிரவன் மங்கிக்கொண்டிருந்தான். தங்கத் துகள்கள் எங்கும் பரந்தாலன்ன செக்கர் வானம். மின்னும் பரிதியின் பொன்னொளி பட்டு நன்னீர்ப் பரப்பு யாவும் நவிலொணு நிறங்கள் காட்டின. பேரறிவாளன் செல்வம்போல் பொன்னொளி நல்கியது. பேரேரியைச் சுற்றி குடற்காற் புன்னையும், மடற்பூந்தாழையும் செறிந்து கிடந்தன. முன்னிலா தண்ணிழல் பரப்பத் தொடங்கியது. மென்தென்றல் சில்லென வீசியது. மதகுகளின் ஓசை மத்தள ஓசை போல் செவிகளில் புகுந்தது. இவற்றிடையே மாவீரன் ஒருவன் அவ் "வேரிக்கரையினிலே" வந்து நின்றான். நெடிய உருவம்; முதுமைக்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் வீரமும் கருணையும் பொலியும் முகம்; சிங்க ஏறு அனைய பீடுடைய பார்வை அவன் யார்?

"வேழமொன் றுகைத்தாளி விண்ணின்வாய் விசையடங்கவு மசைய வென்றதும்
ஈழமுந்தமிழ்க் கூடலுஞ் சிதைத் திகல் கடந்ததோர் ரிசை பரந்ததும்"

(க. பரணி: தாழிசை 200)

என ஓர் இன்னிசைப் புலவரால் புகழ்பாடப்பட்ட சோழர்குல ஏறு; பேராசன் முதற்பராந்தகன். வந்த அந்த மன்னர் மன்னன் சிறிது சிந்தனையில் ஆழ்ந்தான். அடுத்த வினடியில் தான்கண்ட ஏரியைத் தன் கருணைக் கண்களாலே திரும்பி நோக்கினன்; நோக்கிப் பேசுகின்றான்.

கருங்கடலனைய ஏரியே!

உன்னைக் காணும்போது என் உள்ளம் அடையும் உவப்பிற்கு எல்லையே இல்லை. இவ்வின்பப் பெருக்கிலே, கடந்த கால நினைவுகள் என் மனக்கண் முன்னே காட்சியளிக்கின்றன. இதோ உரைக்கிறேன் கேள்.

எனது நாற்பெருஞ் சேனைகளில் யானைப் படையே சிறந்தது. அப்

திரு. அ. இராமமூர்த்தி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

படை எப்பக்கமுஞ் சென்றது. சென்ற திக்கெல்லாம் வெற்றி முழக்கத்தையே கேட்டேன். என் படைக்கஞ்சிய பாண்டியன் மூன்றாம் இராசசிம்மன் பணிந்தான். என் கப்பற் படையைக் கண்டு கலங்கிய இலங்கைவேந்தர்கள் அஞ்சி ஓடிப் போயினர். அப்போரின் வெற்றியை வியந்த மக்கள் என்னை "சங்கிராம ராகவன்" எனப் பட்டப் பாராட்டினர். வித்தியாதரன் எனும் வாணகுல மன்னனை வாட்டி

தொடர்ச்சி 5-ம் பக்கம்



THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்.
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்.

# இந்துசாதனம்

யாழ். துர்முகிஸு சித்திரை மீ
உஉ வ வெள்ளிக்கிழமை

## நியாயமான அளவு நியாயமின்மை!

சிங்களத்துக்குச் சிங்காசனச் சிறப்புரிமையுண்டென்ற திட்டத்துக்கமையத் தமிழையும் நியாயமான அளவுக்குப் பயன்படுத்தலாமென்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் மாமந்திரியார் திரு. பண்டாரநாயக அவர்கள் வாய்விட்டரற்றி வரம் அளித்திருக்கின்றார்! தண்ணீர் நில நலத்தாற் றக்கோர் குணங் கொடையால் என்றங்கு இந்த இணையற்ற ஈகைக்கு எத்துணைத் தகைமை வேண்டும்!

நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொலியுமாம் என்றது போலப் பொசிந்து வரும் பயனுக்குரிய மொழியாய்த் தமிழை மதித்து வைத்திருக்கின்றார் முதன் மந்திரியார் என்றால் நெறிமுறை தவறாத அரசியல் நடத்த வந்திருக்கின்றேன் என்று இவர் கூறுவதை யார் நம்புவார்கள்? யார் ஏற்றுக் கொள்வார்கள்?

இந்த நாட்டில் என்று மொழி ஒன்றுண்டானதோ அன்று தொடக்கம் அரச உரிமைப் பெருமையுடைத்தாகி ஐரோப்பிய ஆட்சியாளர் காலத்திலும் இதர மொழிகளோடு சமநிலைமை பெற்று வந்து நீடுழி வாழ்ந்து வரும் நன்னெறியிலமைந்திருக்கும் தமிழுக்கு இடம் வகுக்கும் இறுமாப்புக் கொண்டிருக்கும் திரு. பண்டாரநாயகவுக்கு ஒன்றுமட்டும் கூறுதும். நிறவெறி பிடித்து நிலை தடுமாறிய 'கிட்டிலரை'த் தொட்டபழி உங்கள் மீது ஏறுதிருக்க வேண்டுமேயானால் உண்மையான மக்களின், கூட்டுறவைப் பெற்றுஇந்நாட்டை ஆளும் ஆற்றலைப் பெற எண்ணுகின் றீர்களேயானால், இன்னமும் அகில உலகிலும் ஈழத்தின் பெயர் செங்கோலாட்சியென்ற தொடர்பில் வைத்து மதிக்கப்படுவது விருப்பமேயானால் இந்த விதமான மொழிப் பழிக்கு ஆளாகும் விபரீத வேற்றுமை வேலையை விட்டுவிடுங்கள் என்பதே.

பாராளுமன்றத்திலே மக்கள் சார்பாகப் புக்கவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளக்கூடிய ஒரு மொழியிலே, இந்த நாட்டுக்கு வேண்டிய அரசியல் மாற்றங்கள் எடுத்து ஆராயப்படுதலின் இன்றியமையாமையை மறுத்து ஏனையோர் விளங்க முடியாத வகையிலே சொற்பெருக்கை நடத்துவதை மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவன் என்ற பீடத்திலிருந்து கொண்டு ஒரு பிரதமர் அங்கீகரிப்பதென்றால் இது இரணிய காலம் என்றே நாம் கூறவேண்டியிருக்கின்றது. தாய்மொழி உரிமைக்கு மட்டுமன்றி நீதிக்கும் நியாயத்துக்கும் ஒழுக்க நெறிக்கும்மாறாகப் புதன்கிழமை பாராளுமன்றத்திலே சிங்களத்திலே சொற்பெருக்காற்றப்பெற்றதை ஆட்சேபித்து வெளியேறிய திருவாளர்கள் பொன்னம்பலம் சுந்தரலிங்கம் இராசவரோதயம் ஆகியோரை நாம் பாராட்டுகின்றோம்.

### மொழித்துரோகத்தால் வெளியேற்றம்

பாராளுமன்றத்திலே சிங்காசனப் பிரசங்க நன்றியுரை விவாதிக்கப் படும்பொழுது திரு W. தயநாயக சிங்களத்திற் பேசியதை ஆட்சேபித்து ஆங்கிலத்திற்பேசும்படி திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலமும் செ. சுந்தரலிங்கமும் பலமுறை கேட்டும் அதை மதியாது திரு. தகநாயக சிங்களத்திலேயே சொற்பொழிவாற்றினர். உடனே திருவாளர்கள் பொன்னம்பலம் சுந்தரலிங்கம் இராஜவரோதயம் ஆகியோர் சபையை விட்டு வெளியேறினர்.

# வேலைத் தோழர் விடுதலை விழா

வைகாசி மாதம் (ஆங்கில) முதலாந்தேதி யென்றால் மேனாட்டு வேலைத் தோழர்களுக்கு ஒரு விளையாட்டு விழா நாளாக விளங்கி வந்தது. முதலாளி வருக்கத்துக்கும் தொழிலாளித தோழர்களுக்கு மிடையேயுள்ள வேற்றுமையை இத தினத்தில் எடுத்துப் பேசிப் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்குத் தலைவாகள் மாபெரும் ஊர்வலங்களை வைப்பார்கள். மெல்ல மெல்ல இதுமேனாட்டுபபழக்கம் என்றவகையில் நிற்காது உலகில் எங்கும் உணர்ச்சியை உண்டுபண்ணும் ஒருநாளாக மாறிவந்தாலும் ஆசியநாடுகளிலே சேஞ்சீனதவிர்ந்த) அவ்வளவு முக்கியத்துவம அடையாமலே இருந்தது.

இலங்கையிலே இடதுசாரிக் கட்சிகள் சம்பிரதாய முறையிலே ஆண்டாண்டுதோறும் ஊர்வலமாய் வந்து உபதேசம் செய்வதை வழக்கமாய் வைத்திருந்தார்கள். அப்பொழுதெல்லாம அரசாங்கத்தைக் கண்டிக்கும் வகையிலே ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள். இம்முறையோ மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றதும் இடதுசாரிக் கட்சிகளின் ஏகபோக (வைகாசி முதலாந்திகதி உரிமை)நின்றுவிட்டது காரண. பண்டாரநாயக ஆட்சி இடதுசாரிக் கொள்கை இடை இடை செறிந்த கட்சிகளினுதவியால் அமைக்கப்பட்டதனால் என்க. எனவே, கொழும்புமாநகரிலே அரசாங்கமும வேலைத் தோழர்களும் அந்யோந்நிய நட்பு முறையிற் கலந்து விழாக் கொண்டாடினர். முன்னர் வீராவேசப் பேச்சும் கோபாவேசக் குறிகளும் காணப்பட்டன. இம்முறையோ வெற்றி விழாவாய் விளங்கியது கண்டிக்கப்படுவதற்கு ஆளில்லை, கண்டனஞ் செய்பவர்களும் அரசாங்க அமைப்பில் நேர்முகமாகவோ அநுதாபமுள்ளவர்கள்.

### வேலைத் தோழர்களுக்கு மே (ல்) நாள்!

சமசமாச பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களிடமிருந்து வீராவேசத்தைப் பணடாரநாயக ஆட்சியாளர் யாருமறியாமலே அரசதந்திரச் சூழ்ச்சியினால் வீறுகுறையச் செய்துவிட்டனர். கூச்சலுக்ும் கும்மாளத்துக்கும் உரியவர்கள் எல்லாரும் ஒரு கும்பலிலே கோவிந்தாப் போடும் தோழர்களாய் விட்டார்கள். காலிமுக முன்றிலும மாநகர சபை முன்றிலும் வாழைத்தோட்ட மைதானமும் இடிமுழக்க வழக்கத்தை இழந்து (இயற்கைமழை முழக்கமிருந்திருக்கலாம) வேலைத் தோழர்களின் வெற்றிவிழாக் கொண்டாட்டக் குதூகலத்தை அமைதியாய் அநுபவித்தன.

இருந்தும் யாழ்ப்பாணத்திலே மாற்றம் மிக மிகச் சிறிதே வழமையாய்ப் பேச்சு வாங்கும் ஐக்கியதேசியக் கட்சிஉருவமே இல்லாதற்றுப் போனாலும் பேச்சுக்கேட்காமலில்லை. அதைவிட ஏனைய கட்சிகளிருக்கின்றனவே சமஷ்டிக்கட்சி தமிழ்மாநாடு முதலியன அவை என்றும்போல இடதுசாரி இடிமுழக்கத்துக்கு ஆளாகின.

இதிலிருந்து பெறப்படுவது இப்பொழுது இலங்கையிலே மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கியதேசியக்கட்சி, சமசமாசக்கட்சி, பொதுவுடைமைக் கட்சியாவும் ஒருபுறமாகவும் தமிழ்பேசும் மக்களின்கட்சிகள் மறுபுறமாகவும் அமைந்திருக்கின்றன என்பதே

# வாழ்க்கை வானில்

— வளர்நதி

### விலை வீழ்ச்சியும் நிற பேதமும்!

சீனிக்கு விலை குறைந்ததல்லவா? ஐந்து சதமானாலும் வந்துதானே விட்டது என்று திரு. பொதுசனம் பெருமிதங்கொண்டு நிற்கும்பொழுது வெள்ளைச் சீனிக்கு விலை விமோசனமில்லையென்ற செய்தி வெளி வந்ததுதான் தாமதம்; அவர் நாடியிற் கையை வைத்த வண்ணம் யோசனை செய்யத் தொடங்கிவிட்டார். நிறபேதம் என்று மனித வருக்கத்திற் பாகுபாடுபோல உயிரற்ற பொருட்களிலுமா இந்த ஏற்றத் தாழ்வு என்று பெருமூச்சுவிட்டார். அதிலும் வெள்ளை நிறத்துக்குத்தானா மேன்மை என்று விசனப்பட்டார். விசனப்பட்டும் என்ன விளையப்போகின்றது?

### மக்கள் அரசாங்கத்தில் வெள்ளைக்கு மேன்மையா?

பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குக்காகப் பொதுமக்கள் தங்கள் வாக்குகளைப் பிரதியுபகாரமாகக் கொடுத்த நன்றியை மறவாத பண்டாரநாயக ஆட்சியாளர் சீனிக்கு விலை குறைத்ததுண்மையே. ஐந்து சதம்தான்! என்றாலும்உண்மை உண்மையே! ஆனால் இந்த உயர்ந்த தரத்துச் சீனி பொது மக்களின் கைக்கெட்டாமல் உயரவேயிருப்பதென்றாற் சன நாயக முறை தவறிவிட்டதே என்று திரு. பொதுசனம் மீண்டும் ஆராயத் தொடங்கிவிட்டார். வெள்ளையாடை அணியும் அரசவை விசாரணை செய்ய சமசமாசக்கட்சித் தலைவர் யோசனை கூறுகிறார்.

ஆதிக்கக் கட்சியில் வெள்ளைக்கு மானந்தான்.

### இலவசப் போக்குவரத்து இயக்கம்!

அநுராதபுரியிலேஅந்த வீரப் பிரயாணி ஒருவர் நின்ற நிலைதான் மக்கள் ஆட்சியின் பெருமையைக் காட்டுகின்றது. புகைவண்டியிற் போக்குவரத்துப் பொதுமக்களுக்குரியது; பொதுமக்கள அரசாங்கம் புதுமையாய்ப் பணியாற்றத் தொடங்கிவிட்டது; சலுகை சன்மானம் உரிமை உழைப்பின் பெருமை என்பன மக்கள் ஆட்சிக் கொள்கைகள். அப்படியானாற் புகைவண்டியிற் பிரயாணச் சீட்டின்றிச் செல்வாரைப் பரிசோதகர் வழிமறிப்பது முறையாகுமா? ஆகவே அநுராதபுரியிலே இலவசப் போக்குவரத்து இயக்கத்துக்கு அடிகோலப்பட்டது என்று சொன்னால் மிகையாகாது.

### தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்!

அந்தப் பயணச் சீட்டுப் பரிசோதகர் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம். வேலையிலிருந்து விலக்கப்படாத நிர்ப்பந்தத்துக்குள் அகப்படாது சாதுரியமாக அந்த இலவசப் போக்குவரத்து இயக்க வீரருக்கு நல்லெண்ண உபதேசம் வைத்து ஒரு பயணச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி செய்து வைத்து விட்டார். மக்கள் ஆட்சியில் மக்களே தீர்ப்பளிக்கும் அதிகாரிகள், அரசாங்க அலுவலாளர்கள் இந்த உண்மையை அறிந்துநடத்தல் அவசியம்.

# காலத்தின் கோலம்

### சகடக்கால் சொல்லும் சரித்திரம்

### இடம் வகுத்தவருக்கு இடமில்லை

பாராளுமன்ற மண்டபத்திலே யார்யார் எங்கெங்கே இருப்பது என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் படைத்திருந்தபழைய பிரதமருக்கு இப்பொழுது யாரும் இடங்கொடுப்பதாய்த் தெரியவில்லையே!

தேர்தலிலே தோற்றுப் போனால் எதிர்க்கட்சிகளுக்குள்ள இடங்களுக்குயா தட்டுப்பாடு நிகழ்தல் வேண்டும். எதிர்க்கட்சித் தலைமைக்கு நிலைமை சரியாயில்லாது போனாலும் அரசாங்கத்தை எதிர்க்கின்றவர்களுமா 'புறம்பே போங்கள்' என்று புறக்கணிக்கும் நிலையில் நிர்ப்பந்தப்படுதல் வேண்டும்.

பொதுவுடைமைக் கட்சியினர் ஐக்கிய தேசியக்கட்சியினருடன் அருகிருக்கக்கூட அருவருக்கின்றார்களாமே! காலமே உன் கோலமென்ன? எட்டுப்பேர் கொண்டது ஐ. தே. கட்சி. மூவருள்ளது பொதுவுடைமைக் கட்சி. ஆனால் காற்றுமாறியடிக்கின்றமையினாற் சின்ன விரலும் சீறிச்சினக்கின்றது.

### 'மேன்மைப் பிரசாவுரிமை' விசாரணை!

புற்றுநோய்ப் புண்ணுக்குச் சத்திரவைத்தியஞ் செய்தால் அது பாம்புப் புற்றுப் போலப் போய்க் கொண்டேயிருக்கும். அந்த வகையிலே பழைய அரசாங்கத்தின் அலுவல்களை ஆராய ஆராய அடிதெரியாத ஆராய்ச்சியாய் முடியும். ஐ. தே. கட்சி அரசாங்கம வழங்கிய மேன்மைப் பிரசா உரிமைமுறை

# இலட்சிய வாழ்க்கையே இன்று இன்றியமையாதது

## அல்லல் தோன்றினும் அஞ்சாமை வேண்டும்!

நிலையிலாப் பொருள்களை நிலையென்றுணர்ந்து இவ்வுலக போக போக்கியங்களே பேரின்பமெனக் கருதி இறுமாப்புற்று மெய்யறிவு கைவரப் பெருது மக்கள் அஞ்ஞான இருளால் மூடப்பெற்று அல்லலுறும் இப் பூவுலகின்கண் பிறந்த நாள்முதலாக இறக்கும்வரையும் உண்டும் உடுத்தும் உறங்கியும் நடமாடுவதே வாழ்க்கையாகும்என அன்னார்எண்ணுகின்றனர்.

இல்வாழ்க்கையும், இல்வாழ்க்கையில் அடையப்பெறும் இன்பங்களும் நிலையற்றவை. நிலையான இன்பம் இறைவன் திருவடி நீழலிலேதான் உண்டு. அந்த இன்பத்தை அடைவதற்கே மக்களெல்லோரும் முயற்சிக்க வேண்டும். உலக இன்பங்கள் இன்பம் போலக் காட்டி ஈற்றில் அளவிலாத் துன்பத்தை அழிப்பன. பப்பாசிப் பழத்தின் மேற்பாகத்தைக் கடித்தால் நன்ருக இனிக்கும் அதன் அடிப்பாகத்தைக் கடித்தாற் கசக்கும். அதற்குள்ளேதான் நச்சு விதைகளும் முளைகளுமுண்டு. அவ்வண்ணமே இவ்வுலக இன்பங்களும் ஓர் பாகம் இன்பமும் மறுபாகம் துன்பமும் இவற்றின் மத்தியில் அளப்பரிய கேடுகளும் வந்துகொண்டேயிருக்கும். அறிவிலா மக்கள் அமோகமாயிருக்கும் இவ்வுலகிலே பெரும்பாலும் துன்பத்தைத்தானுபவிக்க வேண்டிய நியதி உண்டு. இன்பம் சொற்ப பாகமாகத்தானிருக்கும். அந்தச் சொற்ப இன்பந்தானும் நிலையான இன்பமோவென்று பார்த்தால் அப்படியில்லை. முன் இன்பம்போலக் காட்டிப் பின் துன்பத்துக்குள் மூள்கவைப்பது. இவ்வுலகின்கண் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கையைநடத்துகின்றனர். சிலர் மற்றையோர் எங்களைப் புகழவேண்டுமென்று நினைத்துப் பொருட்கள் தேடும் இலட்சியக்காரராய் வாழ்க்கையை நடாத்துகின்றனர். சிலர் செல்வந்தராய் வாழ்வதே வாழ்க்கையின் இலட்சியம் என்ற கொள்கையுடையோராய் வாழ்க்கையை நடாத்துகின்றனர். சிலர் சிற்றின்பமே சிறந்ததென்று வாழ்க்கையை நடாத்துகின்றனர். இப்படியே இன்னும் பலபல இலட்சியங்களைக் குறிக்கோளாகக்கொண்டு மக்கள் வாழ்க்கையை நடாத்துகின்றனர்.

அறிவற்றஇலட்சியங்கள் இவ்வித நிலையற்றவை. இவைகளால் ஈற்றிலே துன்பமே வந்தடையுமென்பதைப் பகுத்தறிவினுல் ஆராய்ந்தறிந்து எமக்கு இந்த மனிதப் பிறவி கிடைத்ததன் நோக்கம் என்ன என்பதைச் சிந்தித்து விசாரப்படுவோன் இவ்வுலகில் ஆயிரத்திலொருவனேயாகும். இப்படி விசார சிந்தை கொள்ளும் ஆயிரத்திலொருவன்தான் அதற்கு நிவிர்த்திக்க மார்க்கந் தேடுவான். இவ்வாறு நிவிர்த்திக்காக மார்க்கந்தேடும் ஆயிரத்திலொருவன்தான் உண்மையான சாத்திரஆராய்ச்சியில் விருப்பங்கொள்வான். இப்படி ஆராய்ச்சியிலிறங்கிய ஆயிரத்திலொருவன்தான் தன்னுள் எழுந்த சந்தேகங்களைப் பெரியார் வாயிலாகக் கேட்டுத் தீர்த்துக்கொள்வான். இப்படிச் சந்தேகந் தீர்ந்த ஆயிரத்திலொ

எழுதியவர்
செல்வி: த. மாலோகமணி

ருவன்தான் தக்க ஆசாரியனைத் தேடுவான். அப்படி ஆசாரியனைத் தேடிய ஆயிரத்திலொருவனுக்குத்தான் சற்குரு தோன்றுவார். சற்குருவைக் கண்டுபிடித்த ஆயிரத்திலொருவனுக்குத்தான் அவரின் மந்திரோபதேசங் கிடைக்கும். அப்படி உபதேசம் பெற்ற ஆயிரத்தில் ஒருவன்தான் குருவின் கட்டளைப்படி அனுட்டிப்பான். அப்படி அனுட்டானத்தைத் தவருமற் கையாண்ட ஆயிரத்திலொருவனுக்குத்தான் எல்லா ஞானமும் பிறந்து உண்மை நிலை தோன்றும். இந்த உண்மை நிலையே மெய்யான இன்பம். இதையடைய முயலுவதே வாழ்க்கையின் சீரிய இலட்சியம். இச் சீரிய இலட்சியத்தை யடைவதற்கே ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும். சீரிய இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு நடக்காத வாழ்க்கையில் உதிக்கும் இன்பங்கள் போலி இன்பங்கள். இப்போலி இன்பங்களிலேதான் இன்றுள்ள மக்கள் மதுவுண்ட களி வண்டுகள் போல மயங்கிக் கிடக்கின்றனர். இன்றைய மக்கள் சீரிய இலட்சிய புருடராய் வாழ்க்கையை வாழாமைதான் இன்றுள்ள மக்களின் தாழ்ந்த நிலைக்குக் காரணம். மேலும் இன்றுள்ள பெரும்பாலான வாலிபர்கள் பொதுவுடைமைக் கொள்கைகளில் நின்று நாத்திகமும் இடாம்பீக வாழ்வுமே தங்கள் வாழ்க்கையின் இலட்சியங்கள் என்று எண்ணுகின்றனர். இவர்களின் சீரற்ற நோக்கங்களால் இன்றைய உலகன்றி எதிர்கால உலகும் பாதிக்கப்படுமென்றெண்ண இடமுண்டு. இவ்வுலக இன்பங்களை அலசி அலசி (புரட்டிப் புரட்டிப்) பார்த்தாலும் இவ்வின்பங்கள் ஈற்றிலே துன்பத்தையே யளிப்பன.

மரத்தின் அடிப்பாகத்தில் ஆழமான கிடங்கு. அம் மரத்தின் வேர்களை அகிழான் அரிக்கின்றது. மரக் கிளையில் ஒருவன் நிற்கின்ருன் கிடங்கிற்குள் நாகம் கிடந்துசீறுகின்றது. புலி யானை அவனைக் கொல்ல ஆயத்தமாகக் காத்துக் கொண்டு நிற்கின்றன. இந்தக் கொடிய அபாயங்கட்கிடையில் மேற்கொப்பிலிருந்து அவன் நாவில் தேன் சொட்டுச் சொட்டாய்ச் சிந்துகின்றது. இத்தனை அபாயங்கட்கிடையிலும் கிடைக்கும் தேனினிமை போன்றதே இவ்வுலக வாழ்க்கையில் நாமடையும் இன்பம். இவ்வின்பங்களும் எத்தனை துன்பங்கட்கிடையில்

தொடர்ச்சி 4ம் பக்கம்

### கூட்ட அறிவித்தல்

தொல்புரம் சிதம்பர அம்பலவாண சுவாமி மானுமுதலியார் மட தர்மசபைப் பொதுக்கூட்டம் இந்த மீ 15ம் உ பல வசதிக்குறைவால் கூட்டப்படாதபடியால் இச் சபைக் கூட்டம் வரும் வைகாசிமீ 6-ம் உ ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தொல்புரம் மானு முதலியார் மடத்தில் நடைபெறும். அத்தருணம் அங்கத்தவர் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

நிகழ்ச்சி நிரல்

1. அறிக்கை வாசித்தல்.
2. வரவு செலவுக் கணக்கு வாசித்தல்.
3. புதிய தர்ம பரிபாலன சபை அங்கத்தவர்களைத் தெரிதல்.

ந. மகாதேவன்
காரியதரிசி

தொல்புரம்
மானுமுதலியார் மடம்,
27-4-56

M. 270 4-5-

### வெந்தீஸ் விற்பனவு

அடைவு நகைகள்

யாழ்ப்பாணம் வண் - கிழக்கு கலட்டி 576/6 அம்மன் கோவில் ரேட்டில் அடைவு பிடிக்க உத்தரவு பெற்றிருக்கும் தா. சி. குமாரசாமி அன்ட் ஸ்ரீமதி. தா. சி. சோமசுந்தரம் அவர்களின் கடையில் 1954-ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1955 - ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1956-ம் ஆண்டு வைகாசி மாதம் 12-ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்,
வெந்தீஸ் மேஸ்தர்.

M 268 27-4, 4-5-56.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் இறிக்குவஸ்துக் கோடு
வழக்கு இல 442 A
சுதுமலை ஐயன் சின்னப்பொடி — வழக்காளி
விரோதமாக
உடுவில் கதிரவேலன் சின்னத்தம்பியும்
ஏழாலை கதிராமர் இளையதம்பியும்
எதிரிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப் பிரகாரம் இதன்கீழ்க் காணப்படும் ஆதனம் 1956-ம் ஆண்டு ஜூன் 25 உ திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனத்துக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவிற்கோவிற்பற்று உடுவில்இறை கொட்டையடி நில பர இரண்டரை (2½)யும் வீடும் குசினியும் பயிர்வகைகளும் வான்பயிர்களிற் பங்கும், வடமேற்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், மேற்கெல்லைக் காணியின் வடக்கருகாக குறித்த கிணற்றிலிருந்து போக்குவரவு செய்வதற்காக விடப்பட்ட வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு முத்தன் பெண் வள்ளியினுதனம் வடக்கு கணபதி சுந்தரத்தின் ஆதனமும் பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனமும், மேற்கு பிள்ளையார் கோயிலாதனம் தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட காணி முழுவதும் அதைச்சேர்ந்தவைகளும்.

தீர்வைத் தொகை

ரூபா 238-72-ம்இன்னும் ரூபா 150 க்கு 24-10-55 துவக்கம் 17-1-56 வரையும் ஹ 1க்கு 100 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் மொத்தத் தொகைக்கு இறுக்கும் வரையும் ஹ 1 க்கு 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 44-23 ம்.

பே முத்துத்தம்பி
வெந்தீஸ் கமிஷனர்

M 272 4 5 (து 100)

## உங்கள் நக்ஷத்திரம்? — எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராகாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 6—5—56 —— 12—5—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

தேக நிலையிற் சிறு குழப்பத்துக்கிடமுண்டு. எல்லா அலுவல்களிலும் கவனமாயிருத்தல்வேண்டும். கண்டனத்தையோ எதிர்ப்பையோ பொருட்படுத்தலாகாது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பத் தகராறுகளிற் சில இன்னமும் தீர்க்கப்படாமலிருக்கும் எனினும் பணவகையில் நல்ல காலம். புது முயற்சிகள் விரும்பிய பயனை அளிக்கும். சமூக அநுகூலமும் புகழும் எய்த நம்பிக்கையுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

அலுவல்களைச் சுலபமாகச் செய்து முடிக்கக்கூடிய வாரம். குடும்ப ஒற்றுமையும் எதிரிகளை வெற்றியடையும் பேறும் காத்திருக்கலாம்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

உபயோகமான சிநேகம் உண்டாவதற்கு இவ்வாரத்தில் இடமுண்டு. பண இலாபமும் காத்திருக்கலாம். முற் பகுதியில் குடும்ப வட்டாரத்திற் சில தப்பபிப்பிராயங்கள் உண்டாகக்கூடும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்.

சுற்றத்தாரோடு சச்சரவு தோற்றலாம். ஞாயிறு மாலை திங்கள் செவ்வாய் தொந்தரவுக் காலமாய் முடியும். நிலைமை பின் சீராகும். வார இறுதியிற் பண அநுகூலம் காத்திருக்கலாம்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

புது முயற்சிகளுக்கு முதல் மூன்று நாட்களும ஏற்றவை. ஆனுற் புதனும் வியாழனும் அதிக தளப்பதை உண்டுபண்ணும். மனத் தொந்தரவும் நிலைத் தளப்பமும் தோற்றக்கூடும். வார இறுதியில் நிலைமை மறுபடி அநுகூலமாய் வரும்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

அலுவல்களிலே பல தடைகளையும் கண்டனங்களையும் சமாளிக்க நேரிடும். ஏமாற்றத்துக்கு மிடமுண்டு. இவ்வாரம் வியாழன் மாலை வெள்ளி சனி துரதிஷ்டமான நாட்கள்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

எதிர்ப்பு மெல்ல ஒழிந்து போகும். எப்பொழுதும் போலல்லாமல் வேலை கடினமாயிருக்கும். ஆனுல் நற்பலன் கிட்டுவது நிச்சயம். மனச் சமாதானம் இராது. தேகநிலையிற் குழப்பமும் ஏற்படக்கூடும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இவ்வாரம் தேகநிலை நன்கு சீரடையவேண்டும். குடும்ப அலுவல்களும் நல்வழிப்படும். பண நயமும் அநுகூலமும் காத்திருக்கலாம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

பலத்த விபரீதங்களை எதிர்த்து நிற்கவேண்டி வரும். உற்ற நண்பர்களும் கண்டிக்க முன்வருவார்கள். நெருங்கிய சுற்றத்தாருடன் சச்சரவுகளை விலத்தி நடக்க வேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

எவ்வகையான முயற்சியிலும் அநுகூலம் காத்திருக்கலாம், அனேகமான முட்டுக்கட்டுகளை விலத்தி வெளியேற முடியும். நண்பர்களும் சுற்றத்தவர்களும் மிகமிக உதவியாயிருப்பார்கள.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

எந்த அலுவலிலும் ஒருவித முடிபுக்கு வரமுடியாத நிலைமை ஏற்படும். குடும்பச் சூழலிற் சிறு குழப்பமும் உத்தியோக முறையிலே தொந்தரவுகளும் ஏற்படக்கூடும். வார இறுதியிற் பண இலாபம் காத்திருக்கலாம்.

# இலட்சிய வாழ்க்கையே இன்று இன்றியமையாதது

3-ம் பக்கத் தொடர்ச்சி

உண்டாகின்றது. இவைகளை மெய்யறிவுள்ளோனே சிந்தித்துணருவான். உணர்ந்து தன் வாழ்க்கையையும் மனிதப் பிறவியின் நோக்கத்தையும் சீரிய இலட்சியப் பாதைக்குச் செலுத்துவான். தன் வாழ்க்கையைச் சீரிய இலட்சியப் பாதைக்குச் செலுத்தும் பொழுது இடையூறுகளும் மேடு பள்ளங்களும் எதிர்த் தாக்குதல்களும் வந்துகொண்டேயிருக்கும். அவையத்தனையையும் அவன் பொருட்படுத்தாதும் சகித்தும் விலக்கிக்கொண்டு தன் இலட்சியத்தை யடைவதிலேயே நாட்டங்கொள்ள வேண்டும். அப்படி அடைபவனே உண்மை வீரன். சீரிய இலட்சியப்பாதையில் வாழ்க்கையை நடத்தும் ஒருவனுக்கு எதிரே வரும்துன்பங்கள் இன்பமாகவே காட்சியளிக்கும். அவன் மலையத்தனை துன்பங்கள் தாக்கினும்அஞ்சாதுஅவைகளை எதிர்த்து நின்று வெற்றியீட்டுவான். ஒருகாலத்தில் உலகமே அவன் பாதத்தில் பல்லிழக்க நாகம் போல அமைந்திருக்கக்காணலாம். சமயம் எதைப் போதிக்கின்றது? வாழ்க்கையின் உயர் இலட்சியத்தைத்தான். வாழ்க்கையில் சமயத்தைப் புகுத்தாவிடின் வாழ்க்கை வளம்பெறாது. ஆகவே மக்களின் சீரிய வாழ்க்கைக்குச் சமயம் அத்தியாவசியம் என்பதை எல்லோரும் உணர வேண்டும். சமயத்தை வாழ்க்கையில் கைக்கொண் டொழுகாமையும் அதன் உண்மைத் தத்துவங்களை உணரத்தெரியாமையுமே இன்றைய வாலிப உலகின் நாத்திகக் கொள்கைக்கும் பொதுவுடைமைக்கும் இடாம்பீக வாழ்வுக்கும்காரணம். விவேகானந்தர், மகாத்மாகாந்தியடிகள், சங்கரர், தயானந்தர், ஆச்சாரிய வினோபாஜீ, வள்ளல் பொன் இராமநாதன் ஆதியாம் மாகன்கள் மானிடப்பிறப்பின் மாண்பையும், பிறந்ததன் நோக்கத்தையும் நன்குணர்ந்து தங்கள் வாழ்க்கையைச் சீரிய இலட்சியப்பாதைக்குச் செலுத்தி இலட்சிய புருடராய்த் திகழ்ந்தமை எல்லோருமறிவர். எளியநடையும் உயர்ந்த நோக்கும் என்றுங் குன்றாத வீரமும், தியாக சிந்தை நிரம்பிய வாழ்க்கையையும் உடைமையாகக் கொண்ட இலட்சிய புருடராய் வாழ்ந்தமையினாலேதான் பூதவுடம்பழிந்தும் புகழுடம்பு இன்றும்நின்றுநிலவுவது. உண்மையான சீரியதொண்டால் உயர்வு அடையலாமேயன்றி மற்றொன்றாலும் உயர்வு அடைய முடியாது. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சீரிய இலட்சியத்தைக் குறிக்கோளாகக்கொண்டு வாழ்க்கையை நடாத்த வேண்டும். இன்றேற் சுக்கானில்லாப் படகு போலவும், திசையறியா மீகாமனைப்போலவும் தத்தளிக்க வேண்டிவரும். இலட்சியமென்பது சுக்கானைப் போலவும் திசையறி கருவியைப்போலவும் உண்மையான நேர்வழியை மக்கட்குக் காண்பிப்பது. சுக்கானிலும் திசையறி கருவியிலும் பிழைபாடுண்டானல் நேர் வழியைக் காண்பிக்க மாட்டாததுபோல். இலட்சியமும் சீரியதாயிருப்பின் தான் உயர்வுண்டாகும். சிறந்ததாயிருப்பின் தாழ்வுண்டாகும் ஆகவே இலட்சியங்கள் உயர்வானசீரிய இலட்சியங்களாக இருக்க வேண்டியதவசியம். ஒரு முறை ஓர் அன்பர் காந்தியடிகளை நோக்கி நீங்கள் கஷ்டப்படாமல் சந்தோஷமான வாழ்க்கையை மேற்கொள்ளலாமே என்று கேட்டார். அதற்கு அவர் சாந்தியற்ற அமைதியற்ற கலவரமுள்ள உங்கள் மத்தியிலேதான் உங்கட்குத் தொண்டாற்றுவதிலேதான் நான் இன்பத்தைக் காண்கின்றேன் என்று பதிலளித்தார்.

(வளரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

வழக்கு இல 11340.

சங்கானை மேற்கு சீனிவாசகப் கைம்பெண் தங்கமுத்து

வழக்காளி

விரோதமாக

சுளிபுரம் இளையதம்பி மாசிலாமணி கைம்பெண் நல்லபிள்ளை

எதிராளி

குறித்த கோட்டார் மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்கனுப்பிய கம்மிஷன் கட்டளைப் பிரகாரம் இதன் கீழ்க் காணப்படுங்காணிகள் 1956ம்ஆ ஜூன்மீ 23 ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே குறித்த காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலி மேற்கு சங்கானைக் கோயிற்பற்று சுளிபுரம் இறை "நெல்லியான்" நிலப் பரப்பு $6\frac{1}{2}$ யும் கிணறும் வீடும் வான் செய் பயிர்களும் எல்லை கிழக்கு இளையதம்பி வயித்திலிங்கத்துக்கும பங்காளர்களுக்கும் மறுபெயர்களுக்கும் உரிய ஆதனம். வடக்கு சபாபதி வயித்திலிங்கத்துக்கும் பங்காளருக்கும், மறுபெயர்களுக்கும் உரிய ஆதனம். மேற்கு சபாபதி வயித்திலிங்கத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்குஒழுங்கை இதடங்கலிற் சொரியலாய் நில. பரப்பு 2ம் அதைச் சேர்ந்தவைகளும்.

2. மேற்படி சுளிபுரம் இறை மாலுவை நில. பரப்பு ஆறு (6, எல்லை கிழக்கு செல்லர் தம்பையாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், வடக்குறோட்டு. மேற்கு வயித்திலிங்கம் நாகலிங்கத்துக்குரிய ஆதனம். தெற்கு சபாபதி வயித்திலிங்கத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். இக்காணி முழுவதும்.

மறு விபரங்கள் வழக்காளியின் பிறக்ரர் மெஸ். ஆர். கந்தையாவிடம் அறிந்துகொள்ளலாம்,

பெ. முத்துத்தம்பி
வெந்தீஸ் கமிஷனர்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய், 27-4-56.

M 27ı 4.5- (ஓ 100)

## விசாரணைச் சபை

கண்ணகி அம்மன் கோவில் வற்றாப்பளை

தர்மச் சொத்துப் பாதுகாப்புச் சட்டத்தின் 102 ம் பிரிவின் கீழ் மேற்படி வற்றாப்பளை அம்மன் கோவிலும்-அதன் சொத்துககளும் பரிபாலிக்கப்படல் வேண்டுமென்றும், அதற்குரிய நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கு எனது சிபாரிசு வேண்டுமென்றும் மேற்படி ஆலய வழிபாட்டுக்குக் குழுவினருட் சிலர் எனக்கு விண்ணபஞ் செய்திருக்கின்றனர்.

ஆகவே இவ்விஷயங்களை விசாரித்து எனக்கு ஆலோசனை கூறும்படி ஒரு விசாரணைச் சபையை நியமித்தள்ளேன், 18-5-56, 19-5-56, 20-5-56 ஆகிய மூன்று தினங்களிலும் முல்லைத்தீவு வாடி வீட்டில் (Circuit Bungalow) இவ்விசாரணைச் சபை விசாரணை நிகழ்த்தும்.

இவ்வாலயத்தைப் பொதுவாக்கி அதன் சொத்துக்களைத் தர்மச் சொத்துப் பாதுகாப்புச் சட்டத்திற்கிணங்க ஒரு தருமகர்த்தர் சபையின் பரிபாலனத்தில் விடுதல் பற்றிச் சாதகமாகவோ பாதகமாகவோ சாட்சியம் கூற விரும்புவோர் மேற்குறித்த தினங்களில் விசாரணைச் சபைக்குத் தங்கள் சாட்சியங்களைச் சமர்ப்பித்து உதவுமாறு வேண்டப்படுகின்றனர்.

(ஒப்பம்) தி. இராசதுரை
மாவட்ட அதிபர்

வவுனியா
26-4-56

M 273 4-5

## தேர்வுக் கேள்விகள் வெளியானமை

முன்னாள் நீதியரசர் ஸ்ரீ செ. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை மகாதேசாதிபதி அவர்கள் நியமித்திருக்கின்றார்.

சென்ற கிழமை நடைபெறவிருந்து தவிர்க்கப்பட்ட சிங்கள ஆசிரிய தராதரப் பரீட்சையிற் கேள்வித் தாள்கள் வெளியானமைபற்றியும் இவ்வகையான சீர்கேடு நிகழாது தடுக்கவும் இக் குழுவினர் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

# பெருவாழ்வு தரும் திருநீறு

1-ம் பக்கத்தொடர்ச்சி

"பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்று தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார். விபூதியை நிலத்திற் சிந்தாவண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" சொல்லிப் பூசவேண்டும். அதனை உத்தூளனமாக வேனும் பூசலாம், உத்தூளனம் என்பது பரவப் பூசுதல். திரிபுண்டரமென்பது மூன்று குறிகளாகப் பூசுதல். மூன்று குறிகளும் படைத்தல் காத்தல் அழித்தல் முதலிய இறைவனின் முத்தொழில்களைக் குறிக்கின்றன.

திருநீறு திருவருட் சக்தியின் தன்மையைக் குறிக்கின்றது. மந்திரமாக விளங்குவது நீறு; வேதங்களிலும் ஆகமங்களிலும் கூறப்பட்டது நீறு; அழகுள்ளது நீறு. முத்தி யின்பத்தைத் தருவதும் சத்தியமாவதும், பத்திதருவதும், சித்தி தருவதும். காண இனியதும், பேணி அணிபவர்களுக்குப் பெருமை கொடுப்பதும், ஆசையைக் கெடுப்பதும், வருத்தந் தணிப்பதும் வானமளிப்பதும் நீறாகும். இராட்சதனை இராவணனின் உடம்பில் அணியப்பட்டதும் நீறாகும். பாக்கியமாவதும், துயிலைக் கெடுப்பதும் நீறாகும். இத்தகைய பெருமை வாய்ந்த திருநீற்றைக் கொண்டே திருஞானசம்சம்பந்தப் பெருமான் பாண்டியனைத் தாக்கிய மாற்றடியாத சுரநோயை மாற்றியருளினர். உவர்மண்கொண்டு சென்ற வண்ணான் ஒருவன் மழைபெய்து தமது உடம்பு நனைந்த காரணத்தால் மேனி வெண்மையாயிருந்தது. இதை யானைமேல் ஏறிச் சென்ற சேரமான் பெருமாணாயனார் கண்டார். உடனே யானையினின்றும் இறங்கினர். வண்ணானைக் கும்பிட்டார். அதனைக் கண்டு வண்ணான் மனம் கலங்கித் தான் அடிவண்ணானென்று கூறினன். சேர அரசனும் அடிச்சேரன் என்றும் "திருநீற்றின் வாரவேடநினைப்பித்தீர் வருந்தாதேகும்" என்றார். இதனின்றும் நாம் விபூதியின் பெருமையை அறிகிறோம். திருநாவுக்கரசு சுவாமிகளும் சூலநோய் உண்டாகியபோது வேறு மந்திரங்களினால்நோயை மாற்ற முடியாமற்போயிற்று. அப்போது அவருக்கு வாழ்வை உதவியது விபூதியேயாகும். அவரது தமக்கையார் திருநீற்றை அஞ்செழுத்தோதிக் கொடுத்தார். "திருவாளன் திருநீறு திலகவதியாரளிப்ப - பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங் குருவாரவணிந்து' என்று சேக்கிழார் சுவாமிகள் அப்பர் சுவாமிகளைப் பற்றிக் கூறுவது கவனிககத்தக்கது.

ஒருபோதும் விபூதி பூசாதவனாகிய அதிசூரன் ஏனாதி நாயனாரை வஞ்சனையால் வெல்லக்கருதி தமது நெற்றியில் நீறுதாங்கிப் போருக்குச் சென்றான். நெற்றியில் விபூதி அணிந்திருப்பதைக் கண்ட ஏனாதி நாயனர் உடனே தாம் எதிர்ப்பதை நிறுத்தினர். விபூதி அணிந்தபடியால அவன் ஒரு சிவனடியாரென நினைத்தார். அதிசூரன் தன் கருத்து முடிக்கும் வண்ணம் இடம் கொடுத்தார். ஏனாதி நாயனாரின் சரித்திரமும் விபூதியின் மகிமையை எடுத்துககாட்டுகிறது. சிவனிடத்துச் சிறிதும் பத்தியின்றி அவருக்குரிய சின்னங்கள்தரித்துத் தீங்கு செய்தோர் அவற்றைத் தரியாது தீங்கிழைத்தோரிலும் மிகப் பெருந் தண்டத்தைப் பெறுவர்.

(வளரும்)

## திருநாவுக்கரசுநாயனர் குருபூசை

நாள்: சித்திரை மீ உ௯ உ (5-5-56) சனிக்கிழமை

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

பகல் 9 — 2 கடவுளாராதனை, நால்வர் பூசை, திருநாவுக்கரசு நாயனார் சரித்திரம் படித்தல், மாகேசுரபூசை,

இரவு $6\frac{1}{2}$ — 8 தமிழ்மறை ஓதல்
திரு. மு. சுப்பையாதேசிக அவர்கள்

பிரசங்கம்:
"திருநாவுக்கரசுநாயனர்"
சைவப்பிரசாரகர்
திரு. த. குமாரசாமிப்பிள்ளை அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 1-5-56,
M. 275 4-5- (ஓ 100


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம்ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

# ஏரிக் கரையினிலே!

1-ம் பக்கத் தொடர்ச்சி

வதைத்தேன். உலாப் பாடிய உத்தமர் 'மதுரைத் தமிழ்ப் பதியும், ஈழமும் கொண்ட இகலாளி'' என என்னைப் புகழ்ந்து பாடினன். யான் எண்ணிய படியே என் முயற்சிகளெல்லாம சேர்ந்து ஒரு சோழப் பேராசை உருவாக்கியது. அதனல் புகழும் அடைந்தேன். அப்போர்களில் என்மூத்தகுமாரன் இராசாதித்தன் பெரும் பங்கு கொண்டான். தக்கோலப் போரில் அவன் காட்டிய பெருவீரம் கூற்றமும்கண்டு அஞ்சும் வண்ணமாக இருந்தது. என் செய்வது? பொல்லாப் பூதுகனும் கங்கை மன்னன் என் அருமைத் திருமகன்—இளைஞர் குல ஏறு—இராசாதித்தன் உயிரைக்குடித்தான். யானை மீது இருந்தவாறே ஆவிவிட்ட அம்மானவீரனை மக்கள் "யானை மேற்றுஞ்சினன்" என்றேஅழைக்கின்றனர். மாட்சிமைப்பட்ட என் மகனின் இறப்பால் என்மனம் உடைந்தது. துன்பம் மிக எய்தினேன். இந்நாடு என்ன ஆகுமோ என எண்ணினேன். என் இரண்டாம் புதல்வன் கண்டராதித்தனுக்கு இளவரசுப்பட்டங்கட்டி ஏக்கம் குறையப்பெற்றேன்.

பாவாணர் புகழும் பரந்த ஏரியே!

தமிழும் சைவமுமே எனது இரு கண்கள் என எண்ணினேன். சைவப் பயிர் வளர்ப்பான் வேண்டி நாளும் பாடுபட்டேன். அம்பலவாணன்வாழ் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தேன். அதை உண்மைப் பொன்னம்பலமாக்கினேன்.

"கோதிலாத் தேறல் குனிக்கும் திருமன்றம்
காதலாற் பொன்வேய்ந்த காவலன்"

என என்னைப் புகழ்ந்து போற்றினர் கவியரசர் ஒட்டக்கூத்தர். எனது படைத்தலைவனற் செம்பியன் சோழிய வரையன் சிட்புலியை வென்றான்; நெல்லூரை அழித்தான். வெற்றி கொண்டு திரும்பிய அத்தலைவன் தொண்டை நாட்டின்கண்ணுள்ள திருவொற்றியூரில் தங்கி அங்குள்ள சிவன்கோவிலில் நாள்தோறும் நந்தா விளக்கெரிப்பதற்குச் சாவா மூவாப் பேராடுகள் தொண்ணூறு வைத்துவந்தான். என்மூத்த குமரன் நினைவாக விளங்கும் இராசாதித்த புரத்தில் கோயில் இலங்கும் இராசாதித்தேசுரருக்கு, இராசாதித்தனுடைய படைஞர் பல நிவந்தங்கள் அளித்துள்ளனர். ஆதிமுடிபுரிலேதங்கியஇராசாதித்தனுடைய தளபதி வெள்ளன் குமரன் என்பான், ஆங்கு ஒரு சிவன் கோவில் எடுப்பித்தான். யான் திருவாவடுதுறையின் கண்ணிருந்த அம்பலவாணன் ஆலயத்தையும் திருச்செந்துறையில் இருந்த ஆடல் வல்லானின் அம்பலத்தையும், உறுமூர் என்னும் ஊரிலிருந்த உமையொரு பாகனின் உறைவிடத்தையும் கற்றளியாக்கிப்பெருமை யடைந்தேன். ''மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்பதுபோல, யான்சென்ற வழியே என் மகனும், எனதுபடைகளும், நாட்டு மக்களும் சென்று சைவசமயத்தைத் தழைக்கச் செய்தனர். சைவப் பயிர் தழையக்கண்ட என் உள்ளம் மழையைக் கண்ட பயிர்போலக் குளிர்ந்து மகிழ்ந்தது.

தொடர்ச்சி 6ம் பக்கம்


## தேவை

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைரேட்டிலுள்ள ஒரு புடைவைக் கடைக்கு விற்பனவுகாரனுக வேலைபழக விரும்பும் ஓர் சுறுசுறுப்பான பையன்தேவை. ஆறு மாசத்தின் பின்னரே சம்பளம் திட்டம் செய்யப்பெறும். வயது, தமிழிற் சித்தி அடைந்த வகுப்பு, ஆங்கிலம் (தெரியுமாயின்) அறிவின் அளவு, தொழில் அனுபவம், தற்காலீகச் சம்பளம் ஆதிய விபரங்களுடனும், இரு நற்சாட்சிப் பத்திரங்களுடனும், தன்னுடைய சொந்த எழுத்தில் மனுப்பண்ணவும். சாப்பாட்டு ஒழுங்குகள் தன் செலவிலேயே செய்துகொள்ள வேண்டும். இரவில் தங்குவதற்கு இடவசதியுண்டு.

சிவம்
C/o இந்துசாதனம்,
யாழ்ப்பாணம்.
M. 277. 4-5-56


பிரதமர் பத்திரிகை நிருபருடன்

# மீண்டும் பேசினர்

'சிங்களமே அரசகரும மொழி'ச் சட்ட திட்டம் புனராலோசனைக்காகப் பிரதமர் தலைவராகவுள்ள ஒரு உபசபைக்கு அரசாங்க ஆதிக்கக் கட்சியால் விடப்பெற்றிருக்கின்றதென்று கூறிய திரு. பண்டாரநாயக, அதை விளக்குமுகமாகச் சொல்லியவை:

சிங்களமே தனி அரசகரும மொழி என்பதற்கு ஒருசிறிதுமையமின்று. ஆனல் நடைமுறையிற்சட்டப்படி அதைக் கொண்டுவரமுன் தீர விசாரணை செய்யப்பட வேண்டிய சில அம்சங்கள் இருக்கின்றன.

தமிழும் ஆங்கிலமும் நியாயமான வகையிற் பயன்படுத்தப்படலாம் எனினும் சிங்களமே தனி அரச கரும மொழி என்ற அடிப்படைக் கொள்கைக்கு முரணுகாத வகையில் மட்டுமே இது நிகழலாம்.

அரசகரும மொழி என்ற சொற்றொடருக்கு முற்ருக வரைவிலக்கணம் இன்னமும் காணப்படவில்லை. ஒன்று மட்டும் நிச்சயம். அரசகரும நடவடிக்கைகள் சிங்களத்திலேதான் எழுதப்பெறும் (Records).

எந்த மொழியிலே பொதுசனம் அரசாங்கத்துக்கு எழுதுகின்றதோ அந்த மொழியிலே பதிலளிக்கப்படும் ஆனல் இது ஒரு குறித்த காலம் வரைக்குமே நடைமுறையிலிருக்கும்.

கிராம அதிகாரிகள் வேண்டுமா வேண்டாமா என்ற கேள்வி மாகாண சபைகளை நிறுவும் யோசனையுடன் சேர்த்து ஆலோசிக்கப்பட வேண்டும்.

'சிங்களம்மட்டும்' ஆலோசனைக் குழுவில் தமிழ்ப் பிரமுகர்களைச் சேர்க்க எனக்குவிருப்பம். ஆனல் தமிழ் அங்கத்தவர்கள் சிங்கள அடிப்படையை மறுக்கிருர்கள்.

புனராலோசனைக் குழுவில் அங்கம் வகிப்போர்,

திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா (தலைவர்) திரு. டபிள்யூ. தஹநாயகா, திரு. எம். டபிள்யூ எச்: டி. சில்வா, திரு. ஐ எம ஆர். ஏ. இரியகொல்லை, திரு. எஸ். பலன்சூரியா, திரு கே எம். பி.இராஜரத்தின, திரு. நிமால் கருணத்திலகா, திரு. எம் பி, டபிள்யூ. மெதிவாகே திரு. ஆர். எஸ். வி. பவுலியர் ஆகியோரும், பொது சபைப் பிரமுகர்கள் நால்வரும் அங்கத்தவராயிருப்பர். இந் நால்வரில் ஒருவர் திரு. எஸ். எச். மேத்தானந்தா, ஐக்கிய பிக்கு முன்னணி இருவரை நியமிக்கும்.

(சென்ற புதன் கிழமை கூடிய பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திற் பிரதமர் கூறியவற்றில் முக்கியமானவை).

## அரசியல் அலை

2-ம் பக்கத் தொடர்ச்சி

வேறு பட்டடைப் பழக்கமுள்ளவர்கள். நெருப்பு உமிழும் பழைய சமசமாசக்கட்சியார் ஒருதரப்பில், சந்தர்ப்பம் நோக்கி வெற்றிக் கட்சியிற் சேர்ந்தவர்கள் இன்னெரு தரப்பில், இதற்கிடையில் இடைவிடாது குற்றம் பிடித்த பழக்கமுள்ள அந்தக் காலிக் கண்டனப் பண்டிதர் திரு. தகநாயக. இவர்களைவிட மத போதகர்கள் பன்னீராயிரவர் எதைக் கேட்கின்ருர்களோ அதைச் செய்யாது விட்டால் அபாயம் என்ற பயம் ஒருபுறம். அவர்கள் தோப்புக்கண்டம் போடச்சொன்னலும் போட்டே ஆக வேண்டிய பொல்லாத நெருக்கடியில் மக்கள் தலைவர் சிக்கிக்கொண்டு செய்வதறியாது தயங்குகின்ருர்.

வெளியேறும்

### வேடிக்கை!

அரசாங்கக் கட்சியுடன் அவ்வளவு எதிர்ப்புக்கு இடமில்லாத வகையினலே இப்பொழுது எதிர்க்கட்சிக்குள்ளேயே சச்சரவு தோன்றியிருக்கின்றது.

பொதுவுடைமைக் கட்சியினருக்கு ஐக்கியதேசியக் கட்சியினரைக் காணும் பொழுதெல்லாம் எருது சிவப்புக் கொடியைக் கண்டால் வெருண்டோடும் நிலைமை ஏற்படுகின்றது. பொதுவாகப்பொதுவுடைமைச் சிவப்பைக் கண்டு வெருண்டோடுவார்கள் ஐக்கியதேசியக் கட்சியினர். ஆனல் மாறி மாறி வருங்காலமே!

பொதுவுடைமையினர் மட்டுமல்ல அந்த அடங்காத் தமிழ்த் தலைவனும் இடங் கொடுக்க மாட்டாராம்! எதிர்க்கட்சி ஐ.தே. கட்சியை அநுமதிக்கத் தீர்மானஞ் செய்தவுடன் பொதுவுடைமையாளரும் திரு. சுந்தரலிங்கமும் புதன் கிழமை நடந்த எதிர்க்கட்சிக் கூட்டத்தினின்றும் வெளியேறினர்கள்.

——

பாராளுமன்றத்தில்.

பொத்துவில் அங்கத்தவரின்

# பொருத்தமான பேச்சு

## திருத்தப் பிரேரணைகளிற் சிறந்த விவாதம்

**புதன்கிழமை ஆரம்பமான பாராளுமன்றக் கூட்டத்திலே கிழக்கு மாகாண அங்கத்தவர்கள் பெரும் பங்கெடுத்தபொழுது பொத்துவிற் ருகுதிக்குப் புகழ்ச்சி தானகவே தோன்றியது. ஜனப் முஸ்தாபா அவர்கள் திறப்பட முதல்முதலாகவுள்ள தமது பாராளுமன்றப் பேச்சை நிகழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.**

மக்கள் ஐக்கிய முன்னணி ஒரு முக்கூட்டு அரசியல் உபாயம் என்றும் அதற்காக ஒரு தனிமதிப்பில்லை என்றும் புது அரசாங்கம் அமைக்கப்பட்டதே மகிழ்ச்சிக்குரிய காரணமென்றும் இந்த அரசாங்கமும் பொது மக்களுக்கு மாருகப் போனல் வந்தவழியே சென்றுவிட நேரிடுமென்றும் பொத்துவில் அங்கத்தவர் பொருத்தமாக எடுத்துக்காட்டினர்.

திரு. மாக்கான் மரைக்கார் பின்றெடர்ந்து பேசினர். அடுத்தாற்போல மட்டக்களப்பு அங்கத்தவர் திரு. இராசதுரை தமிழிலே பேசும்பொழுது சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டுமென்றும் கிழக்கு மாகாணத்திற் சிங்களவர் குடியேற்றப்படுதல் நீதியாகாதென்றும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் : செல்வநாயகம், சுந்தரலிங்கம் பொன்னம்பலம், அழகக்கோன் திருத்தப் பிரேரணைகள் சார்பாகப் பலமாகக் கண்டனஞ் செய்தனர்.

(வாதந் தொடர்ந்து நடைபெறுகின்றது)

# வந்துகொண்டிருக்கும் மாற்றங்கள்

கொழும்புத்திட்டப் பொருட்காட்சி பின்போடப்பட்டது. கால வரையறையின்றித் தள்ளி வைக்கப்பட்ட இந்த முடிவைப் பற்றி இராணி மாதாவுக்கு இலங்கைப் பிரதமர் சொந்த முறையிலே விளக்கங் கொடுப்பாராம்.

x x x

**தூக்குத் தண்டனை போக்கப்படும்**

தூக்குத் தண்டனையை மூன்று வருட காலத்துக்கு விலக்கிக் கடுஊழிய மறியல் விதிக்கும் வழிவகை எடுக்குமுகமாக ஒரு சட்டத் திட்டம் பாராளுமன்றத்திலே நீதி மந்திரியின் காரியதரிசியாற் கொண்டுவரப்பட்டது.

x x x

**பாராளுமன்றத்திற் சொற்போர்**

சிங்காசனப் பிரசங்க நன்றியுரை விவாதத்தின் போது திரு. சுந்தரலிங்கம் அவர்களுக்கும்பிரதமருக்குமிடையிலே சொற்போர் உருசிகரமாக நடந்தது. பிரதமர் நாட்டுக்குத் துரோகத்தனமாக நடந்தார் என்று திரு. சுந்தரலிங்கம் அவர்கள் தமிழ் ஒடுக்கப்படுவதுபற்றிப் பேசும்போது கண்டித்தார். இதை ஆட்சேபித்துப் பிரதமர் 'துரோகி' என்ற சொல்லை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டவுடன் திரு. சுந்தரலிங்மம் அவ்வாறு செய்துவிட்டு மறுபடியும் துரோகத்தனமான செய்கை என்று குறிப்பிட்டார். மறுபடியும் பிரதமர் ஆட்சேபித்தார். திரு. சுந்தரலிங்கம் அச் சொற்களையும் நீக்குவதாக உடன்பட்டார்.

x x x

**மேற்சபை அங்கத்தவர் நியமனம்**

பொதுத் தேர்தலுக்காக மேற்சபை அங்கத்துவத்தைக் கைவிட்டவர்களின் இடத்துக்கு நியமனப் பத்திரங்கள் வைகாசி 14 இல் ஏற்றுக் கொள்ளப்படும். தெரிவுவைகாசி17 இல்நடைபெறும்.

**அது வேண்டாமாம்!**

இலங்கைக்கு ஒரு அரசியல் அமைப்பை உண்டு பண்ண ஒரு அரசியல் அமைப்பு நிர்ணயசபையை நிறுவுதல் வேண்டியதில்லை என்று பிரதமர் பண்டாரநாயக பத்திரிகை நிருபர் கூட்டத்திற் கூறினர்.

# ஏரிக் கரையினிலே!

—0—

5ம் பக்கத் தொடர்ச்சி

தமிழ் நாட்டின் தவப்பெரும் ஏரியே!

"தமிழ்ச் சிவ இனிமையெனும் தனிப் பொருளாம்" என்றார் ஒரு பண்டைத் தமிழ்ப்புலவர். தமிழும் சிவமும் ஒன்றே என்பது என் உள்ளக் கிடக்கை. ஆதலால் இரண்டையும் பேணி வளர்த்தேன். அறம் பலசெய்தேன். ஆறுதலும் அடைந்தேன் என் மகன் இராசாதித்தனை இழந்து தவித்த என் மனதிற்கு கண்ணெதிரே காட்சியளிக்கின்ற கண்ணுதற் பெரியோன் கற்கோவில்களும் காதிற்கினிய தமிழோசையுமே ஆறுதல் அளிக்கின்றன என்பது ஒருதலை. தாளாற்றி தந்த பொருளெல்லாம் தண்டமிழ் வளர்ப்பதற்கே என்று எண்ணிய என்னை புலவர் பெருமக்கள் "பண்டித வற்சலன்" எனப் பாராட்டினர். என் ஆற்றலைப் போற்றிய அப் பாவாணர்கள் "குஞ்சர மல்லன்" எனக் கூறி மகிழ்ந்தனர். பாண்டி நாட்டை வென்று சோழ நாட்டுடன் சேர்த்து ஆண்ட என்னை "இருமுடிச் சோழன்" என ஏற்றினர்.

வேளாண்மை வளர்க்கும் வன்மை மிகு ஏரியே!

உலகத்தில் சிறந்த தொழில் உழவுத் தொழில் என்பது உண்மையாகும். உலகமறை ஓதிய நம் திருவள்ளுவனார் தாம் இயற்றி உலகுக்களித்த அவர் தம் "திருக்குறளில்" அத்தொழிலுக்கென ஓர் அதிகாரம் வகுத்திருப்பது அதன் பெற்றியை உணர்த்தும். அப் பெருநாவலர்,

"சுழன்றும் ஏர்ப் பின்ன
துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்றும்,

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்
பவர்"

என்றும், உழவின் இன்றியமையாமையினையும், உழவரின் பெருமையினையும், விளக்கியிருப்பது போற்றத் தக்கது. கவிச் சக்கரவர்த்தி கம்பரும் உழவின் பெருமையைச் சிறப்பாகக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. இவ்வாறு புலவர் போற்றும் உழவுததொழிலே எனது ஆக்கம் என எண்ணினேன். அத்தொழிலைப் பெருக்க நினைந்தேன். அவ்வாக்கத்திற்கு மக்கள் ஏற்றம் தந்தனர். மக்களின் துணைகொண்டு ஒரு மாபெரும் ஏரியினை வெட்ட விழைந்தேன். எண்ணியவர் திண்ணியராகப் பெற்றால் எண்ணியதை எண்ணியாங்கு எய்துவர் என்பது திண்ணம். ஆதலின் திண்மையுடன் தொண்டாற்றினேன் அவ்வெண்ணத்தை நிறைவேற்றப் பல்லாயிரம் மக்கள் உழைததனர். அம்மக்களின் உழைப்பின் பயனாகத்தான் இன்றோர் மாபெரும் ஏரியாக — பல கற்றொலைவுகள் நீளமுள்ள நீர்நிலையாக — இதோ என் கண்முன்னே இணையிலாக்காட்சியளிக்கின்றாய். நெஞ்சத்தில் வஞ்சமிலா வண்மையாளர் தாம் பெற்ற செல்வத்தை வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்குவது போல் நீயும் தமிழ் மக்களுக்கு உன்பால் உள்ள நீரைக் கொடுதது அளிசெய்கின்றாய் என்பதைக் காண என் மனம் இறும்பூதெய்துகின்றது. அளக்கலாகா அளவு நீர் நிரம்பப் பெற்று, நீலக் கடலனைய நெடியதோர் தோற்றம் அளிக்கின்றாய். உன் வண்மையை எண்ணித்தான் போலும் நமது செந்நாப்புலவர் "பேரறிவாளன் பெற்ற செல்வம் ஊருணி நீர் நிறைந்ததனை ஒக்கும்" எனக் கூறினார். இதை எண்ண எண்ண என் மனம் திருவள்ளுவரின் பேரறிவினையும், முக்காலத்தையும் உணர்ந்து நெஞ்சத்தினையும் உன்னி அவரை இறைஞ்சுகின்றது. என் புகழுக்கு இலக்காகத திகழும் உன்னை நினைந்து என் நெஞ்சம் கார் மேகத்தைக் கண்ட களிமயிலைப்போல் மகிழ்ந்தாடுகின்றது.

ஒப்பிலாப் புகழ் பரப்பும் ஊருணியே!

இதோ கதிரவன் தன் ஆற்றல் இழப்பது குடதிசையில் குதிதது விட்டான். எங்கும் மஞ்சள் படாம் போர்த்தது போற் காணப்படும் வானத்துக் காட்சி என் கண்ணை ஈர்த்து என்னைக் கவிஞனுக்குகின்றது. முத்தமிழையும் முழுதுணர்ந்த வித்தகன் உறையும் பொதிகைத்தென்றல் மெல்லென வீசி என் நெஞ்சத்தைக் குளிர்விக்கின்றது மாலை மதியமும் வீசு தென்றலும் என் மனதைக் குழைய வைக்கின்றன நீல நிறக் கடலைக் காணுவது கவின் பெறு காட்சி. அத்தன்மைத்தாய காட்சியையே உன்னிடம் காண்கின்றேன். இத்துணைச் சிறப்புடன் என் கண்முன் காட்சியளிக்கும் நீ நாட்டை வளப்படுத்தும் நல்லதோர் நீர் நிலை; உழவுத் தொழிலை உருவாக்கும் ஊருணி. உன் கொடையால் பல ஆயிரம் வேலி நிலங்கள் பயிராகின்றன. தங்கமென இலங்கும் சம்பா நெல் பொங்கி விளைகின்றது என்பதை உன்னிப் பூரிக்கின்றேன். நீரின்றமையாதுலகு; அஃதே போல் நீ இல்லாது சோழர் உலகு அமையாது போலும்! உன்னால் ஏற்றமுறும் தமிழ் மக்கள் எத்தனை இலக்கம்!! உன் பக்கங்களில் சூழ்ந்து கிடக்கும் மரங்களில் மீனுண்டு களித்துக் கிடக்கும் புள்ளினங்கள் எத்தனை கோடியோ!!! ஒவ்வொரு உயிரும் உன்னையல்லவா போற்றிப் புகழ வேண்டும்? உன்னைப் புகழ்வதற்குப் பதிலாக என்னையல்லவா புகழ்கின்றனர். மக்கள் என்னை மனமாரப் போற்றுகின்றனர்; புலவர்கள் பொன்னான தமிழாற் பாமாலை சூட்டுகின்றனர்; வீரநாராயணன் என என்னை வியந்துரைக்கின்றனர் உழவர்க்கு நண்பனாகிய மண்புழு எவ்வளவு உழவுக்கு உதவி செய்தாலும் தான் புகழை விரும்புவதில்லை தன்புகழ் பரப்பித் தான் மட்டும் மண்ணுக்குள் மறைந்து வாழ்கின்றது. யானும் அப்படியே எண்ணுகின்றேன். ஆயினும் மக்கள் என்னை விடுகின்றாரில்லை. உன்னை வீரநாராயணன் ஏரி என்றே அழைக்கின்றனர் எது எப்படி ஆயினும் ஆகுக. நாடு வாழ நான் வாழ்வேன் என்பதனை உறுதியுடன் எண்ணி ஒல்லும் வகை உஞற்றுகின்றேன்.

என்புகழ் பரப்புப்
ஏற்றமிகு ஏரியே!

கண்ணுக் கெட்டிய தூரம் கவின்பெறும் காட்சியுடன் இலங்கும் உன் கைகளாம் அலைகள் என்னை நோக்கிப் பேரிரைச்சலுடன் ஓடி வருவதைக் காண்கின்றேன் இதோ என் கால்களை அவ்வலைகள் நனைந்தோடிச் செல்கின்றன; என்னுளை திர இரு கைகளாலும் அள்ளிப் பருகுகின்றேன். கைம்மாறு கருதி இவ்வாறு செய்தனை போலும் என் அன்னையே! என்ன விந்தை. உலகத்திற்கு அச்சாணியாம் உழவுத் தொழிலுக்குதவிய நீர் மகளாம் உனக்கு நானல்லவோ நன்றி செலுத்தல் வேண்டும்? இவ்வுலகு உள்ளளவும் நிலைக்கப் போகும் உனக்கு – கைம்மாறு கருதாத பெரியோர்போல் விளங்கும் உனக்கு — நான் நன்றிசெலுத்தல் ஒல்லுமோ? அன்றி நான் உன்னை வாயார வாழ்வாய் என வாழ்த்தலும் வேண்டுமோ! எனினும் என் தமிழ்நெஞ்சம் உன்னைநாளும் வாழ்த்தி வணங்குகின்றது.

இவ்வாறு வாழ்த்தி வணங்கிய மன்னர் பெருமான் உள்ளக்களிப்பால் உந்தப்பெற்று, காதல் மீதூரப்பெற்ற காதலன் தன் உயிரினும் இனிய காதலியை வைத்த கண் வாங்கலது பார்ப்பதுபோல, தண்ணளிசெய்யும் அப்பேரேரியை இமைகொட்டாது பார்த்துக் கொண்டு நின்றான். மாற்றுத் துணைக்கு மறவர் ஒருவருமின்றிவாளது துணையுடனே, மாலைக்காட்சி காணச் சென்ற மன்னனைக் காணாத மறவர் கூட்டத்தினர் ஓடோடியும் வந்தனர். ஏரியினைப் பார்த்துக் கொண்டு, ஏரிக்கரையினிலே இறுமாந்து நின்ற அச்சோழர் தலைவனைக்கண்டு களிப்பெய்தினர். அவ்வீர மறவரின் ஆரவாரத்தைக் கேட்ட அரசன் தன் நினைவு வந்தவனாய்த் தன் பார்வையைத் திருப்பினான். காரிருள் நேரத்தில், மறவர்சூழக் கடுகிச் சென்றான் தன் கோவில் நோக்கி.

குறிப்பு:- வீரநாராயணன் ஏரி தென்னாற்காடு மாவட்டத்தில், சிதம்பரத்திற்கு அண்மையில் உள்ளது. இவ்வேரி இன்று மக்களால் "வீராணத்து ஏரி" என்று வழங்கப்படுகிறது.

ஆதாரம்:- திரு. சதாசிவபண்டாரத்தார் அவர்களின் "பிற்காலச் சோழர் வரலாறும்" "கலிங்கத்துப் பரணியும்".

—0—


### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 12087,

பிருன்சிசுறேனல்ட் சந்தியாகு கொழும்பு வழக்காளி

எதிர்

1. சவிரிமுத்து லியுசு நிக்கோடிசு ஒழுங்கை தற்போது மதுபானக் கந்தோர் ஜெயலை. (Deceased)
2. சிசில் முத்தம்மா ஆசீர்வாதம் C/o A E தம்பர், பெரியதெரு யாழ்ப்பாணம். எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 12087 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956 ஸ்ரீ ஆனி மீ 9 உ சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாழ்ப்பாணம் கரையூரில் செம்பன் புளியடியிற் புலம அன்னம்மை பங்குக்கு வடக்கு, செம்பன் புளியடியிற் புலமும் மறு பிரிவுகளும் என்னும் காணி நீ இ. 3 குழி 8¾ J. மனவல் பிள்ளை உலாந்தா படத்தில் நொம்பர் 327-ல் இரண்டாம் துண்டு. இதில் வடக்குப்புறமாக ஒரு பரப்பும் 13 3/8 குளியில் அரைவாசியும் புதுக் கல்வீடும். கிணறும், பயிர்களும். இதில் அரைவாசிக்கு உள்ள தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்பு உருத்து புற நீங்கலாக, தெற்குப் புறமாக இந்த நீ. இ. 1 குழி 13 3/8க்கும் எல்லை கிழக்கு திருசெல்வம் யோசேப்பும் பெண் அன்னம்மாவும், வடக்கு ஒழுங்கை, மேற்கு கை ஒழுங்கை, தெற்குசெவ்வேத்தியாப்பீ சவிரிமுத்துவும் பெண் மரியம்மாவும்.

வ அ. துரையப்பா,
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்
30-4-56.

M. 276. 4-5 த 100



## கம்பராமாயணம்

(யுத்தகாண்டம்)

### கும்பகருணன் வதைப்படலம்

(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

...... யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வெளியீடு ......

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், க. வேந்தனார் அவர்கள் எழுதிய
விளக்கவுரையுடன் விரைவில் வெளிவரும்.

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

இத்துடன்,

170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245 ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் சர்மையா அவர்களால் 4-5-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.